FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318752

1. District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **06/2026** Date: நாள் **04.07.2026**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: **Bharatiya Nagarik Suraksha Sanhita 2023** Sections பிரிவுகள்: **106**
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **03.07.2026** Date to : நாள் வரை **Between 16.00 hrs and 23.55 hrs**
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் - Time to : நேரம் வரை -
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **04.07.2026** Vol - II Time : நேரம் **15.30 hrs** **16.00 Hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **7 Kms South East**
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Tiruvannamalai Municipal Corporation Office, Tiruvannamalai
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.Y.Adbul Ragoop** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.M.K.Yousuff**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-48** (d) Nationality : நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **Special Tahsildar (Social Security Scheme)** (g) Address : முகவரி **Taluk Office, Thandarampattu, Tiruvannamalai Dt.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1).Tr. S. Balaji, aged 43/2026, Junior Engineer, Engineering Section, Tiruvannamalai Municipal Corporation. 2).Tr. T. Karthikeyan, aged 35/2026, Town Surveyor, Land Survey Section, Tiruvannamalai Municipal Corporation. 3).Tr. R. Vijayakumar, aged 53/2026, Junior Engineer, Town Planning Section, Tiruvannamalai Municipal Corporation. 4).Tr. M. Ilango, aged 45/2026, Temporary Field Assistant, Engineering Section, Tiruvannamalai Municipal Corporation. 5). Tr. Manikandan, Age: 34/2026, S/o Sridhar, No. 21/11, Saniya Apartments, Third Floor, 10th Avenue, Ashok Nagar, Chennai – 600083 (Private Individual / Contractor)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
---

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) ------

10 Total value of properties stolen / involved : ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: ------
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 04.07.2026-ஆம் தேதி மாலை 15.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திருவண்ணாமலை மாவட்ட தண்டராம்பட்டு தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.Y.அப்துல் ரகூப் அவர்கள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.Y.அப்துல் ரகூப், தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்), வட்டாட்சியர் அலுவலகம், தண்டராம்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. R.C.S2/191/2026, Dated: 04.07.2026 அய்யா, பொருள்: 03.07.2026-ஆம் தேதியன்று திருவண்ணாமலை மாநகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்ட போது கைப்பற்றிய கணக்கில் வராத முகாந்திரம் கூற இயலாத மற்றும் உரிமை கோராத

இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
04/07/2026,

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04.07.2026 at 17hours.

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண் .....

கையூட்டு பணம் என சந்தேகத்திற்கிடமாக இருந்த பணம் ரூ. 55,000/- மற்றும் ஆவணங்களை மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் - சம்மந்தமாக. பார்வை: திடீர் ஆய்வின் போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், நாள் 03.07.2026. நான் கடந்த 02.07.2026-ஆம் தேதி பணியில் இருந்த போது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவுப்படி, திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் இணைந்து திடீர் சோதனை மேற்கொள்ள பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் ஒரு அலுவலர் தேவைப்படுவதாகவும், உடனிருந்து அரசு சாட்சியாக செயல்பட வேண்டியுள்ளதாகவும் கூறி என்னை 03.07.2026-ஆம் தேதி திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு நேரில் சென்று அறிக்கை செய்யுமாறு கேட்டுக்கொண்டதன் பேரில், நான் காலை சுமார் 10.30 மணியளவில் காவல் ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். அப்போது அவர் என்னிடம், திருவண்ணாமலை மாநகராட்சி அலுவலகத்தில் பொதுமக்களிடம் சொத்துவரி விதித்தல், நகர நில அளவை செய்தல், கட்டிட அனுமதி மற்றும் வரைபட ஒப்புதல் வழங்குதல், ஒப்பந்தப் பணிகளை முடித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி முடிவு அறிக்கை (Work Completion Report) வழங்குதல் போன்ற பணிகளுக்காக நேரடியாகவும், இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு பெறுவதாகக் கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் பேரில் திடீர் சோதனை மேற்கொள்ள இருப்பதாகக் கூறி, என்னை அரசுத்தரப்பு சாட்சி/துணை ஆய்வுக்குழு அலுவலராக உடனிருக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்பின்பு, மாலை சுமார் 16.00 மணிக்கு நானும், காவல் ஆய்வாளர்கள் திரு. இரா. அருள்பிரசாத் மற்றும் திருமதி. A. ஹேமமாலினி, காவல் குழுவினருடன் இணைந்து, திருவண்ணாமலை - திருக்கோவிலூர் சாலையில் அமைந்துள்ள திருவண்ணாமலை மாநகராட்சி அலுவலகத்திற்கு வந்து திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இவ்வலுவலகமானது திருவண்ணாமலை-திருக்கோவிலூர் செல்லும் சாலையில் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிக்கு அருகே சாலைக்கு மேற்கு பகுதியில் மேற்படி சாலையில் இருந்து சுமார் 80 மீட்டர் தூரத்தில் கிழக்கு திசை பார்த்தவாறு அமைந்துள்ளது. மாநகராட்சி அலுவலக கட்டிடம் தரைத்தளம் மற்றும் முதல் தளம் என இரண்டு தளங்களாக உள்ளது. தரைத்தளம் நுழைவு வாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. தரைத்தளத்தின் வடக்கு திசையில் துணைமேயர் அறையும் அதனைத்தொடர்ந்து மாநகர சுகாதார அலுவலர் அறையும் அமைந்துள்ளது. துணைமேயரின் அறைக்கு எதிரே முதல் தளம் செல்லும் மாடிப்படிகள் அமைந்துள்ளது. அதனையடுத்து பொது சுகாதாரப்பிரிவு அலுவலகமும் அதனை தொடர்ந்து வருவாய் பிரிவு அலுவலகமும் அமைந்துள்ளது. அதன் எதிரே கிழக்கு நோக்கி வழித்தடம் அமைந்துள்ளது. வழித்தடத்தின் வடக்குத்திசையில் பதிவேடுகள் வைப்பறையும் அதனையடுத்து பரப்புரையாளர் பிரிவு அறை அமைந்துள்ளது. நுழைவு வாயிலின் தெற்குத்திசையில் வரவேற்பாளர் அறை அமைந்துள்ளது.

அதனைத்தொடர்ந்து வரி வசூல் பிரிவு அறையும், அதனையடுத்து ஆணையரின் நேர்முக உதவியாளர் அறையும், அதனையடுத்து பாதுகாப்பு பெட்டக அறையும் அமைந்துள்ளது. வரி வசூல் அறைக்கு எதிரே கிழக்கு திசையில் முதல் தளம் செல்லும் மற்றொரு மாடிப்படியும் அதனைத் தொடர்ந்து மாநகர ஆணையர் அறையும், அதனையடுத்து மேயர் அறையும் அமைந்துள்ளது. மேயர் அறையின் நேர்எதிரே கிழக்கு நோக்கி வழித்தடம் செல்கிறது. அதன் தெற்கு திசையில் தகவல் தொழில் நுட்ப அறையும், அதனைத் தொடர்ந்து தரவு உள்ளீடு அறையும், அதன் அருகே மக்கள் தொகை கணக்கீடு பிரிவு அறை அமைந்துள்ளது. முதல் தளத்திற்கு செல்ல இரண்டு வெவ்வேறு மாடிப்படிகள் உள்ளது, இவ்விருப்படிகளுக்கு இடையே மத்தியில் முதல் தளத்தின் மையப்பகுதி அமைந்துள்ளது. மையப்பகுதியின் கிழக்கு திசையில் பண்டக வைப்பறையும், மேற்கு திசையில் இரண்டு கழிவறையும், மற்றொரு பண்டக வைப்பறையும் உள்ளது. மையப்பகுதியின் கிழக்கு பகுதியில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி முறையே ஆலோசகர் அறை, அதனையடுத்து மாநகர நிலஅளவையர் அறை, பண்டக வைப்பறை, நகரமைப்பு அறை, இளநிலை பொறியாளர் நகரமைப்பு அறை, மற்றும் நகரமைப்பாளர் அறைய, தணிக்கை அறையும் உள்ளது. முதல் தளத்தின் மையப்பகுதிக்கு தெற்கு பகுதியில் காத்திருப்பு அறையும், அடுத்ததாக கூட்டரங்கமும் அமைந்துள்ளன. மையப்பகுதிக்கு வடக்கு திசையில் முறையே கழிவறை, மாநகரப்பொறியாளர் பிரிவு ஆகியன அமைந்துள்ளன. இவ்வாறாக அமைந்த அலுவலகத்தினை மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு தரை தளத்தில் அமைந்துள்ள வருவாய் பிரிவு, பொது சுகாதாரம், மக்கள் தொகை கணக்கெடுப்புப்பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவுகளிலும், முதல் தளத்தில் உள்ள நகர நில அளவைப்பிரிவு, நகரஊரமைப்பு பிரிவு, பொறியியல் பிரிவு என அனைத்து பிரிவுகளிலும் உள்ள அலுவலக ஊழியர்கள் மற்றும் தற்காலிக பணியாளர்கள் அனைவரையும் ஒரு சேர முதல் தளத்தின் மையப்பகுதியில் அழைத்து வரப்பட்டது. திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் திரு.P.M.N.முஜிபூர் ரகுமான் அவர்கள் அவருடைய அலுவலகத்தில் இல்லை, விசாரித்த போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 02.07.2026 நாளிட்ட ஆணையின்படி கூடுதல் இயக்குநராக பதவி உயர்வு பெற்றுள்ளதாகவும், தற்போது திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் நிலையில் உள்ளதால் இன்றைய தினம் 03.07.2026-ஆம் தேதி அலுவலகத்திற்கு வரவில்லை எனவும் தெரிவித்தார்கள். பின்பு முதல் தளத்தின் மையப்பகுதிக்கு அழைத்துவந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும், தங்களை தற்சோதனைக்கு உட்படுத்தி கொண்டும், தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்றும் அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலர்கள்

ஒவ்வொருவராக சோதனை செய்தும், பெண் அலுவலர்களை காவல் ஆய்வாளர் திருமதி.அ.ஹேமாமாலினி அவர்கள் மூலம் கூட்டரங்கு அருகாமையில் உள்ள தனி அறையில் தனித்தனியாக சோதனை செய்யப்பட்டது. சோதனையின் போது கண்டறியப்பட்ட தொகை மற்றும் தகுந்த முகாந்திரம் கூறியதால் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு:

நகர அமைப்பு பிரிவு				
வ. எண்.	அலுவலரின் பெயர் மற்றும் முகவரி	பதவி பெயர்	கண்டறியப்பட்ட தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை (ரூ)
1.	இகயவஞ்சிதா, 229, கணேசபுரம், முதல் வார்டு, திருவண்ணாமலை கைபேசி 8056962776	(இளநிலை பொறியாளர், திட்டம்/நகர அமைப்பு ஆய்வாளர்)	-	-
2.	ஆர்.கமலச்செல்வி, 428, அரசமரத்தெரு, திருவண்ணாமலை கைபேசி. 7539990300	நகர அமைப்பு, இளநிலை உதவியாளர்	150	150
3.	T.சிவராமன், மாணிக்கவாசகி தெரு, கீழ்அணைக்கரை, திருவண்ணாமலை கைபேசி. 8524038932	நகர அமைப்பு, இளநிலை உதவியாளர்	-	-
4.	V.ஜெயசீலா, பிள்ளையார் கோவில் தெரு, ஏந்தல், இரண்டாவது தெரு, திருவண்ணாமலை. கைபேசி.9566608819	நகர அமைப்பு, கணினி திட்ட உதவியாளர்	-	-
5.	C.சதீஷ்குமார், 495, பிள்ளையார் கோவில் தெரு, சதுப்பேரி, திருவண்ணாமலை. கைபேசி.9942479114,	நகர அமைப்பு, தற்காலிக பணியாளர்	1760	1760

பொறியியல் பிரிவு				
வ. எண்.	அலுவலரின் பெயர் மற்றும் முகவரி	பதவி பெயர்	கண்டறியப்பட்ட தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை (ரூ)
1.	C.தேவி, க/பெ. இரவிச்சந்திரன் (லேட்), பெரியகல்லாப்பாடி கிராமம், தச்சம்பட்டு அஞ்சல், கைபேசி எண்.9092021649	(இளநிலை உதவியாளர்)	40	40
2.	தா.தீபா க/பெ.யுவராஜன், 224 ஏ, பெருமாள் நகர், திருவண்ணாமலை, கைபேசி எண்.9952346595	(இளநிலை உதவியாளர்)	240	240
3.	ச.முத்துலட்சுமி க/பெ. சீதாராமன், இராமலிங்கனார் மெயின் ரோடு, இந்தியன் வங்கி எதிரில், திருவண்ணாமலை கைபேசி எண்.8122171709	பணி ஆய்வாளர்	-	-
4.	தே.ஜன்னி, க/பெ. வினோத் குமார், 620, இடுக்குப்பிள்ளையார் கோவில் தெரு, திருவண்ணாமலை கைபேசி எண்.7012951552	பணி ஆய்வாளர்	1000	1000
5.	இரா. அரீஷ் குமார் த/பெ. இரவிக்குமார், 64/ஏ. திரு.வி.க நகர், விழுப்புரம், கைபேசி எண்.9944430203.	பணி ஆய்வாளர்	50	50
6.	க.இராஜா த/பெ. கருணாநிதி 6/118, வீரக்கோவில் தெரு, ரெட்டிபாளையம்,		2200	2200

	காட்டுகாநல்லூர் (அஞ்சல்) ஆரணி திருவண்ணாமலை கைபேசி எண்.9751904373			
7.	V.பிரபாகரன், 2/52 ஏ, பெருமாள் கோவில் தெரு, தர்மபுரி-636701 கைபேசி எண்.9943399576	ஓவர்சீர் (மேற்பார்வையாளர்)	290	290
8.	அருள்குமார், 80 மாரியம்மன் கோவில் தெரு, பண்ருட்டி கடலூர் 607108, கைபேசி எண்.6379782343	அரசு ஊழியர்	-	-
9.	P.அரவிந்த், 1020 அலப்பனூர் மெயின் ரோடு, தி.இரங்கநாதபுரம், தண்டராம்பட்டு, திருவண்ணாமலை கைபேசி எண்.8682895529	தற்காலிக பணியாளர்	450	450
10.	வெற்றிச்செல்வன், 19/8ஏ, இரைலிங்கனார், 10-வது தெரு, திருவண்ணாமலை கைபேசி எண்.7845737475	தற்காலிக பணியாளர்	6000	6000
11.	அன்பரசன், 102 மாரியம்மன் கோவில் தெரு, வேடநத்தம் கிராமம், திருவண்ணாமலை கைபேசி.8838139223		2800	2800
12.	முத்துகுமரன், 169, பாரதிதாசன் நகர், திருவண்ணாமலை கைபேசி.9566697321		-	-
13.	S.புவனேஸ்வரி க/பெ.சிவா, 43/83, நடுத்தெரு, சின்ன காங்கேயனூர்,	தற்காலிக பணியாளர்	-	-

	பள்ளிகொண்டாப்பட்டு, திருவண்ணாமலை கைபேசி.9043224356			
14.	K.வாசுகி க/பெ. இராய்குமார், 232, தென்மரத்தெரு, காவேரியாம்பூண்டி, திருவண்ணாமலை, கைபேசி எண்.7695883944	தற்காலிக பணியாளர்	-	-

வருவாய் பிரிவு

வ. எண்.	அலுவலரின் பெயர் மற்றும் முகவரி	பதவி பெயர்	கண்டறியப்பட்ட தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை (ரூ)
1.	அ.சபரினாதன் த/பெ.அசேகன், 35/18 கல்நகர், திருவண்ணாமலை கைபேசி எண்.9597824343	(இளநிலை உதவியாளர்)	-	-
2.	ம.பாரத், த/பெ.மணி, 565 பிள்ளையார் கோவில் தெரு, தேவனாம்பட்டு கிராமம் மற்றும் அஞ்சல், திருவண்ணாமலை கைபேசி எண்.7339046890	வருவாய் உதவியாளர்	-	-
3.	சுகன்ராஜ், த/பெ.நாகராஜ், 454, பஜனை கோவில் தெரு, கையூர், ஆரணி தாலுக்கா, திருவண்ணாமலை கைபேசி எண்.9994950028	வருவாய் உதவியாளர்	-	-
4.	ஆ.விஜயராஜ், த/பெ. ஆறுமுகம், 86/146, கல்நகர், அரசமரத் தெரு, திருவண்ணாமலை	அலுவலக உதவியாளர்	-	-

	[illegible]			
5	[illegible]	முன்னாள் வார்டு பணியாளர்		

நில அளவை பிரிவு

வ. எண்.	அலுவலரின் பெயர் மற்றும் முகவரி	பதவி பெயர்	கண்டறியப்பட்ட தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை (ரூ)
1.	[illegible]	தற்காலிக பணியாளர்	110	110
2.	[illegible]	தற்காலிக பணியாளர்	720	720

தகவல் தொழில் நுட்ப பிரிவு

வ. எண்.	அலுவலரின் பெயர் மற்றும் முகவரி	பதவி பெயர்	கண்டறியப்பட்ட தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை (ரூ)
1.	[illegible]	உதவி திட்டனையாளர் (அ) உதவி நிரலாளர்	20	20

2.	M.கோபு, த/பெ. முனுசாமி, 462, கேளூர் கிராமம், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை கைபேசி எண்- 8838039840	புள்ளி விவரப் பதிவாளர்.	660	660

தற்காலிக பணியாளர்கள்

வ. எண்.	அலுவலரின் பெயர் மற்றும் முகவரி	பதவி பெயர்	கண்டறியப்பட்ட தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை (ரூ)
1.	C.பாண்டியன், த/ப.36சி, அடுக்குமாடி குடியிருப்பகம், கீழ் அணைக்கரை, திருவண்ணாமலை கைபேசி எண்- 9994976555	தற்காலிக பணியாளர்	-	-
2.	K.சுமதி, க/பெ. பாபு, 7/9 சோமவரக்குளத்தெரு, திருவண்ணாமலை கைபேசி எண்- 9952742602		-	-
3.	B.பாரதி, க/பெ. P.மாரியம்மன்கோவில் தெரு, சின்ன வேடியப்பனூர், திருவண்ணாமலை கைபேசி எண்- 9025232061		-	-

சென்சஸ் குழு - தற்காலிக பணியாளர்

வ. எண்.	அலுவலரின் பெயர் மற்றும் முகவரி	பதவி பெயர்	கண்டறியப்பட்ட தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை (ரூ)
1.	S.காமாட்சி, 58-24A. ராம்விட்டோபா நகர்,	Technical Assistant	-	-

	அண்ணாசாலை, திருவண்ணாமலை கைபேசி எண்- 6379778043			
2.	J.யாசின். 64/C4 ஆதாம் கார்டன், சமுத்திரம், நல்லவன்பாளையம், திருவண்ணாமலை கைபேசி.8122922365	Technical Assistant	1350	1350
3.	K.சந்தோஷ் குமார், 153, துண்டு தெரு, பெரியகிளாம்பாடி, திருவண்ணாமலை கைபேசி எண்.6384108472	Technical Assistant	1160	1160
4.	G. சுப்புலட்சுமி, வானவில் நகர், வேங்கிக்கால், திருவண்ணாமலை கைபேசி.7397323355	Multi Task Staff	25	25
		பொது பிரிவு		
வ. எண்	அலுவலரின் பெயர் மற்றும் விலாசம்	பதவி பெயர்	கண்டறியப்பட்ட தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்ட தொகை (ரூ)
1	வே.சாமிநாதன், த/பெ. வேலு, எண்.2/258 சேரியந்தல் கிராமம், கிளியாப்பட்டு அஞ்சல், திருவண்ணாமலை வட்டம் மற்றும் மாவட்டம். செல்.9585483930.	உதவியாளர்	300	300
2	T.சரளா, க/பெதாகூர் வினோபா, எண்.50.C, செல்லநேரி தெரு, திருவண்ணாமலை. செல்.9894855126.	உதவியாளர்	100	100
3	R.துவக்குமார்,	இளநிலை	200	200

	த/பெ.ராஜா, கீழ்நாத்தூர் காலனி, திருவண்ணாமலை. செல்.9894613365.	உதவியாளர்		
4	ந.கோவிந்தராஜ், த/பெ. நாகப்பன், எண்.79, கீழ்நாத்தூர் காலனி, திருவண்ணாமலை. செல்.9789621519.	பதிவறை எழுத்தர்	120	120
5	S.மாயாதேவி, க/பெ. பரசுராமன், எண்.38, பங்களாத்தெரு, கீழ்அணைக்கரை கிராமம், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை. செல்.9445615329.	தற்காலிக பணியாளர்	இல்லை	இல்லை
6	T உஷா, த/பெ.தமிழ்செல்வன், எண்.198 நடுத் தெரு, கீழ்கச்சிராப்பட்டு கிராமம், திருவண்ணாமலை மாவட்டம். செல்.9655596041.	தற்காலிக பணியாளர்	300	300
7	S.அஞ்சலை, க/பெ. செல்வம், எண்.423, மாரியம்மன் கோவில் தெரு, சு.கீழ்காச்சிப்பட்டு கிராமம், தென்மாத்தூர் அஞ்சல், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை. செல்.9087739034.	தற்காலிக பணியாளர்	இல்லை	இல்லை

பொது சுகாதார பிரிவு:-

வ. எண்	அலுவலரின் பெயர் மற்றும் விலாசம்	பதவி பெயர்	கண்டறியப்பட்ட தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திரும்ப அவர்களிடமே

				ஒப்படைக்கப்பட்ட தொகை (ரூ)
1	R.தேவி, க/பெ. நாராயணன், எண்.49/9 வ.உ.சி நகர், 10வது தெரு, திருவண்ணாமலை. செல்.6380897735.	SBM-CO Coordinator (தற்காலிக பணியாளர்)	100	100
2	M.ஜெயபாரதி, க/பெ.முருகன், எண்.2/3 புதிய வாணியங்குளத் தெரு, திருவண்ணாமலை. செல்.9944892432.	SBM-Supervisor (தற்காலிக பணியாளர்)	600	600
3	R.புவனேஸ்வரி, க/பெ.கிரிதர ஜெயவேல், எண்.1/101, LIG தாமரை நகர் 3 வது தெரு, திருவண்ணாமலை. செல்.9003062640	Typist. (தற்காலிக பணியாளர்)	இல்லை	இல்லை
4	S.K.கனிமொழி, த/பெ. செல்வம், எண்.147, A, மெயின் ரோடு, சாவல்பூண்டி கிராமம், நல்லவன்பாளையம் அஞ்சல், திருவண்ணாமலை மாவட்டம். செல்.9488950916.	Computer Operator (தற்காலிக பணியாளர்)	இல்லை	இல்லை

மேலும் பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் முன்னிலையில் இளநிலை பொறியாளர் திரு.சு.பாலாஜி என்பவரை முதல் தளத்தில் உள்ள நகர பொறியாளர் (City Engineer) அலுவலக பிரிவிற்கு அழைத்துச்சென்று சோதனை செய்து பார்க்க அவர் தான் அணிந்திருந்த பேண்ட்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.20,000/-மும், வலது பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.15,000/-மும் ஆகமொத்தம் ரூ.35,000/- ஆஜர் செய்தார். அந்தப்பணம் குறித்து அவரிடம் கேட்க, தகுந்த முகாந்திரம் ஏதும் கூற வில்லை. மேலும் அதே பொறியியல் பிரிவு அலுவலகத்தில் பணிபுரியும் தற்காலிக பணியாளர் திரு.ம.இளங்கோ, வயது.45/2026, த/பெ மணி, களப்பணி உதவியாளர் (Field Assistant) என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.3,500/- வைத்திருந்தார், மேற்படி தொகைகள் பற்றி இருவரிடமும் விசாரிக்க, அந்த பணத்திற்கான தகுந்த முகாந்திரம்

கூறவில்லை. அவர்களுடைய பொறியியல பிரிவு [illegible]
கையிருப்பு பதிவேடு குறித்து கேட்க, பதிவேடு ஏதும் இல்லையென்றும் பராமரிக்கப்படவில்லை என்றும் கூறியதால் சந்தேகத்தின் பேரில் மேற்படி தொகைகள் இலஞ்சப்பணம் என சந்தேகத்தின் பேரில் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனை ஆரம்பிக்கப்பட்ட போது இளநிலை பொறியாளர் திரு.பாலாஜி அவர்கள் அறையில் இருந்த ஒப்பந்ததாரர் திருமணிகண்டன் வயது.34/2026, த/பெ ஸ்ரீதர், எண்.21/11, சானியா அபார்ட்மெண்ட்ஸ், மூன்றாவது மாடி, 10-வது அவென்யு, அசோக் நகர், சென்னை-83 என்பவரை சோதனை செய்ய அவரிடம் இருந்து ரூ.10,000/- வைத்திருந்தார். அவரை விசாரிக்க தான் திருவண்ணாமலை பழைய அரசு மருத்துவமனையில் இருந்து சண்முகா பள்ளி வரை தெரு விளக்குக்காக பூமியில் கேபிள் பதிக்கும் ஒப்பந்த பணியை மேற்கொண்டதாகவும், அதுகுறித்தான கோப்புகளை துரிதப்படுத்தி பணி முடிவுச்சான்று பெற வந்திருப்பதாகவும் கூறினார். மேலும் அவர் வைத்திருந்த தொகை ரூ.10,000/- குறித்து கேட்க, அந்த தொகைக்கான சரியான முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் முடிவுச்சான்று பெற வேண்டி கையூட்டு எனப்படும் இலஞ்சம் கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. மேலும் மாநகராட்சி நகர நில அளவைப்பிரிவில் பணிபுரியும் நகர சார் ஆய்வாளர் திரு.தேகார்த்திகேயன் என்பவரை சோதனையிட அவரிடம் ரூ.2,400/- வைத்திருந்தார். அந்த தொகை குறித்து கேட்க, அந்த பணத்திற்கான தகுந்த முகாந்திரம் கூறாததாலும், அவர்களுடைய நிலஅளவைப்பிரிவு அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் கையிருப்பு பதிவேடு குறித்து கேட்க, பதிவேடு ஏதும் இல்லையென்றும் பராமரிக்கப்படவில்லை என்றும் கூறியதால் மேற்படி தொகை ரூ.2,400/-ஐ இலஞ்சப்பணம் என சந்தேகத்தின் பேரில் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மாநகராட்சி நகரமைப்பு பணிபுரியும் இளநிலை பொறியாளர் திரு.இராவிஜயகுமார் என்பவரை சோதனையிட அவர் ரூ.2,600/- வைத்திருந்தார். அந்த தொகை குறித்து கேட்க, அந்த பணத்திற்கான தகுந்த முகாந்திரம் கூறாததாலும், அவர்களுடைய நகரமைப்பு பிரிவு அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் கையிருப்பு பதிவேடு குறித்து கேட்க, பதிவேடு ஏதும் இல்லையென்றும் பராமரிக்கப்படவில்லை என்றும் கூறியதால் சந்தேகத்தின் பேரில் மேற்படி தொகை ரூ.2,600/-ஐ இலஞ்சப்பணம் என சந்தேகத்தின் பேரில் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் முதல் தளத்தின் மையப்பகுதிக்கு அழைத்து வரப்பட்ட அனைத்து அலுவலர்களையும் பிரிவு வாரியாக தங்கள் பணிபுரியும் அலுவலக பிரிவுகளுக்கு தனித்தனியாக அழைத்துச்சென்று ஒவ்வொரு பிரிவு அலுவலகத்திலும் பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி தரை தளத்தில் வருவாய் பிரிவில் சோதனை மேற்கொள்ளப்பட்டதில் ஒரு மேஜையின் மீது ரூ.1,500/- இருந்தது. அப்போது

அலுவலக சோதனையில் உடன் இருந்த வருவாய் உதவியாளர்கள் திரு.ம.பாரத், திரு.நா.சுகன்ராஜ் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.அ.சபரினாதன் ஆகியோரிடம் மேற்படி மேஜை குறித்து விசாரிக்க, திரு.பாரத் என்பவர் அம்மேஜை வருவாய் உதவியாளர் திருமதி.சோனியா என்பவர் அலுவல் பணிக்காக பயன்படுத்தும் மேஜை எனவும், அவர் தற்போது சொத்துவரி வசூலுக்கு சென்றிருப்பதாகவும் கூறினார். மேற்படி தொகை பற்றி விசாரிக்க, யாரும் உரிமை கோராததால் மேற்படி தொகை ரூ.1,500/- வழக்கு விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் இதர அனைத்து பிரிவு அலுவலகளிலும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் முன்பு சோதனை மேற்கொண்டதில் சந்தேகப்படும்படியான பணம் ஏதும் புலப்படவில்லை. மேலும் திருவண்ணாமலை மாநகராட்சி அலுவலகத்தின் வாயிலிலோ, எந்த ஒரு அலுவலக பிரிவுகளிலும் ஊழல் தடுப்பு, ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநர் அலுவலக முகவரி குறித்த விழிப்புணர்வு பலகை வைக்கப்படவில்லை. பின்னர் திருவண்ணாமலை மாநகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு, பொறியியல் பிரிவு, நகரஅளவைப்பிரிவு, பொதுப்பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு, வருவாய் பிரிவு அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள், குடிநீர் மற்றும் மின்பணியாளர்கள், கணினி உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள் ஆகியோர்களின் 2026-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான வருகைப்பதிவேடு பக்கத்தின் நகல்கள் எடுத்து சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர்கள், பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், திருவண்ணாமலை மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களிடமும், ஒப்பந்ததாரர்களிடமும் தகுந்த முகாந்திரம் கூற இயலாத ரொக்கத்தொகை ரூ.53,500/- மற்றும் சந்தேகத்திற்கிடமான வகையில் அலுவலக மேஜையின் மீது இருந்த யாரும் உரிமை கோராத ரொக்கம் ரூ.1,500/- ஆக மொத்த தொகை ரூ.55,000/-ஐ இந்த திடீர் சோதனையில் கையூட்டு எனப்படும் இலஞ்சமாக பெறப்பட்ட பணம் என சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது யாருக்கும் மனதளவிலோ, உடலளவிலோ எந்த துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. மேலும், அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுக்கோ, பொருட்களுக்கோ எந்தவித சேதமும் ஏற்படுத்தவில்லை. பின்பு மீண்டும் குழுவினர்களை தற்சோதனைக்கு உட்படுத்தி கொண்டும், தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என அலுவலக ஊழியர்கள் முன்பு காண்பிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் செயல்முறை இன்று 03.07.2026 இரவு 23.55 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத முகாந்திரம் கூற இயலாத மற்றும் உரிமை கோராத கையூட்டு பணம் என சந்தேகத்திற்கிடமாக இருந்த பணம் ரூ. 55,000/- (ரூபாய் ஐம்பத்தையாயிரம் மட்டும்) மற்றும் திருவண்ணாமலை மாநகராட்சி அலுவலக பிரிவுகளின் 2026 ஜூன் மாதத்திற்கான

வருகைப்பதிவேடு நகல்கள் ஆகியவற்றுடன் இணைத்து இந்தப் புகார் மனுவைக் கொடுக்கிறேன். இப்புகார் மனுவின் பேரில் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxxx) யூ.அப்துல் ரகீம், 4/7/26, தனி வட்டாட்சியர் (சமூகநீதி தனிப்பிரிவு)

Sir/Madam,

Received the complaint on 04.07.2026 at 15.30 hrs and a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.06/2026 u/s 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 and 106 BNSS 2023, on 04.07.2026 at 16.00 hrs.

(Sd/-XXXXX) இரா.அருள்பிரசாத், கா.ஆ 04.07.2026 காவல் ஆய்வாளர், ஊதக பிரிவு, திருவண்ணாமலை

The FIR in original along with the complaint is being sent to the Hon'ble Principal District and Sessions Judge, Tiruvannamalai and the other copies to the officers concerned.

04/07/2026